★ மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு:

காவேரி
பட்டுச் சோலை
(33350)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ தஞ்சாவூர்
★ பெங்களூர் சில்க்
★ கோயம்புத்தூர்-கொட்டன்
★ பட்டு வேட்டிகள் மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்

காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 07 திங்கட்கிழமை (24 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 332

யுத்த நிறுத்தம்; பூநகரிப் பாதையை திறத்தல்

இன்றைய பேச்சுகளில் முக்கியமாக ஆராய்வு!

புனரமைப்புத் திட்டங்கள் குறித்தும் விரிவாகப் பரிசீலனை செய்யப்படும்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24

ஸ்ரீலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இரண்டாவது கட்டப் பேச்சுக்களின் போது யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துதல் மற்றும் குடாநாட்டிற்கான — பாதுகாப்பான — போக்குவரத்துப் பாதையைத் திறத்தல் ஆகியவை குறித்து முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புத் திட்டங்கள் குறித்தும் இந்தப் பேச்சுக்களின் போது விரிவாக ஆராயப்படும் என்றும் தெரியவந்தது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் முற்பகலும், பிற்பகலிலும் இரண்டு அமர்வுகளாக நடைபெறும்.

இன்றைய பேச்சுக்களின் போது வடபகுதியின் அபிவிருத்தி, யுத்த நிறுத்தத்துக்கான சூழ்நிலைகளை உருவாக்குதல் உட்பட பலவிடயங்கள் குறித்து ஆராயப்படும் என "ரூபவாஹினி" நேற்றிரவு அறிவித்தது.

முதற்சுற்றுப் பேச்சுக்களின் போது பிரேரிக்கப்பட்ட விடயங்கள் குறித்து இன்று விரிவாகப் பரிசீலிக்கப்படும் என்றும் ரூபவாஹினி அறிவித்தது.

யுத்த நிறுத்தம்

இரு தரப்பினருக்கும் இடையிலான முதல் கட்டப் பேச்சுக்களின் பின்னர் கடந்த வாரம் இராணுவ நடவடிக்கைகள் குறைந்திருப்பதைச் சுட்டிக் காட்டிய அரசுத் தரப்புப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

செய்தியாளர்கள் வருகை

யாழ்ப்பாணம், ஒக். 24

விடுதலைப் புலிகள் — அரசுப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை பற்றிய செய்திகளை சேகரிப்பதற்காக 17 பேரைக் கொண்ட செய்தியாளர் குழு நேற்று பலாலி ஊடாக யாழ். வந்து சேர்ந்தது.

பலாலியிலிருந்து காங்கேசன்துறை சென்று அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு செய்தியாளர் குழு வந்து சேர்ந்தது.

(உ-15-173)

மாஹோ திரும்பியது

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிய பின்னர் மாஹோ கப்பல் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. (உ-173)

அரச தூதுக்குழு வாரம் தோறும் யாழ்ப்பாணம் சென்று திரும்பும்

தூதுக்குழு பிரதிநிதி குணரத்தினா உதயனுக்கு தகவல்

கொழும்பு, ஒக். 24

ஆரம்ப வேலைகளை மேற்கொள்ளும் வரையில் நான் அங்கம் வகிக்கும் அரசுக் குழுவே வாராவாரம் யாழ்ப்பாணம் சென்று பேச்சுகள் நடத்திவரும்.

கட்டடக் கலை நிபுணரான திரு. நவின் குணரத்தினா கடந்த வெள்ளியன்று கொழும்பில் வைத்து உதயனுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. குணரத்தினா கொழும்பில் உள்ள அவரது தர்மபால மாவத்த வாசஸ்தலத்தில் வைத்து இப் பிரத்தியேகப் பேட்டியை அளித்தார்.

அவர் சொன்னதாவது:-

சமாதானத்தை நோக்கிச் செல்லும் பாதையில் முதலில் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதாக அரசுக் குழுவின் முதல் விஜயம் அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து

நவின் குணரத்தினா

நாம் திரும்பியதும் இதுதொடர்பாக ஆராய பிரதமர் சந்திரிகா பல சந்திப்புகளை நடத்தினார். இருண்ட யாழ்ப்பாணத்தை மீளப் புனரமைப்புச் செய்ய பிரதமர் ஆவலாக இருக்கிறார்.

ஆரம்ப வேலைகளை மேற்கொள்ளும் வரை எமது குழுவே வாராவாரம் யாழ். சென்று பேச்சுகள் நடத்தும்.

தேவைப்படும் பட்சத்தில் அமைச்சர்கள் விஜயம் செய்வர். அது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எம் நாட்டவரிடமே பிரதமர் அப் பொறுப்பை ஒப்படைத்துள்ளார். யாழ். சென்று திரும்பியதுடன் நாம் பிரதமருக்கு அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்கவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இன்னும் உள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இரண்டு தரப்பிலும் அதே பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 24

அரசு—விடுதலைப் புலிகள் இடையே கடந்த 13,14ஆம் திகதிகளில் நடைபெற்ற முதல் கட்டப் பேச்சுக்களின் போது கலந்துகொண்ட அதே பிரதிநிதிகளே இன்று நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களிலும் பங்குபற்றவிருக்கின்றனர்.

அரசுத் தரப்புக்கு பிரதமர் சந்திரிகாவின் அந்தரங்கச் செயலாளரான திரு.வி.பாலபட்டபெண்டி தலைமை வகிப்பார்.

தகவல், ஒலிபரப்பு, சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரான திரு. லயனல் பெர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இன்று காலை 8.15 மணிக்கு அரச தூதுக்குழு வரும்

கொழும்பு, ஒக். 24

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவிருக்கும் அரசாங்கத் தூதுக்குழுப் பிரதிநிதிகள் நால்வரும் இன்று காலை 6மணிக்கு கொழும்பு இரத்மலானை விமானப் படைத் தளத்தில் இருந்து விசேட விமானத்தில் புறப்பட்டு பலாலி வந்து சேர்வார்கள் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அங்கிருந்து மீண்டும் ஹெலிக்கொப்டர் மூலமாக காலை 8-15 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள திறந்த வெளியில் அவர்கள் வந்திறங்குவர்.

இன்று பகல் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் மாலை 5மணிக்கு பல்கலைக்கழக திறந்த வெளியிலிருந்து ஹெலி மூலம் பலாலிக்குப் புறப்பட்டுச் செல்லும் அவர்கள் அங்கிருந்து விமான மூலம் கொழும்பு திரும்புவர்.

வடக்கிற்கு சில பஸ்களை அனுப்புவது பற்றி ஆராய்வு

கொழும்பு, ஒக். 24

வடக்கில் பஸ் சேவைகளை சீராக்குவதற்கு வசதியாக அங்கு சில பஸ்களை அனுப்பி வைப்பது குறித்தும் —

வடக்கிற்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக ஜெனரேட்டர்கள் மற்றும் உபகரணங்கள் டீசல் ஆகியவற்றை அங்கு அனுப்பி வைப்பது குறித்தும் —

கொழும்பில் அரச உயர் பீடங்கள் ஆலோசித்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கப்பலில் இவற்றை எடுத்துச் செல்வது குறித்தும் — அவற்றுடன் மலத்தீன், வைத்திய உபகரணங்கள் ஆகியவற்றை அக்கப்பலில் சேர்த்து அனுப்புவது குறித்

(5 ஆம் பக்கம் பார்க்க)

மேலும் பல பொருள்கள் மீதான தடை நீக்கம்?

கொழும்பு, ஒக்.24

ஹெல்மட்,மோட்டார் சைக்கிள்கள் உட்பட மேலும் ஐந்து முதல் பத்துவரையான பொருள்கள் மீதான தடையை நீக்குவதற்கு பிரதமர் சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது வடபகுதிக்கு எடுத்துவருவதற்கு28பொருள்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே

அவற்றில் ஒருபகுதி பொருள்கள் மீதான தடையே நீக்கப்படடிருப்பதாகவும்—

அதுபற்றிய வர்த்தமானி அறிவித்தல் இவ்வாரம் அல்லது அடுத்த வார முற்பகுதியில் வெளிவரும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது

தடை நீக்கப்படவுள்ள பொருள்களின் பட்டியல் பற்றிய விவரம் கிடைக்கவில்லை. (உ-3)

அமைதி வேண்டி நேற்று கொழும்பில் பாதயாத்திரை

கொழும்பு, ஒக், 24

வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணவேண்டும்; நாட்டில் அமைதி ஏற்படவேண்டும் — என்று கோரி ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் நேற்று பாதயாத்திரை ஒன்று இடம் பெற்றது.

பௌத்த, கிறிஸ்தவ மத குருமார்கள் உட்பட பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த யாத்திரையில் பங்குபற்றினர்.

பாத யாத்திரையின் முடிவில் விகாரமாதேவி பூங்காவில் சமாதான மாநாடு ஒன்றும் நடைபெற்றது.

ஐ. நா. தூதரகத்தின் மேற்பார்வையில் பூநகரிப் பாதையைத் திறக்கலாம்

பாதுகாப்பு வட்டாரங்களின் யோசனை இது

கொழும்பு, ஒக். 24

பூநகரி - சங்குப்பிட்டி பாதையை போக்குவரத்துக்கு ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் மேற்பார்வையில் திறந்துவிட வேண்டும் என யோசனை பாதுகாப்பு வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

சுகாதர வாகனப் போக்குவரத்து இடம்பெறக் கூடியதாக இப்பாதை இல்லை என்று தகவல்துறை அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ தெரிவித்ததாக "சண்டே ஒப்சேர்வர்" செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பாதையைத் திருத்துவதற்கு தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

யாழ். பொது நூலகத்தை புனரமைக்க பத்துக் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

விசாரணைக் குழுவில் புலிகள் பிரதிநிதிகள்?

கொழும்பு, ஒக், 24

1981ஜூன் முதலாம்திகதி— யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தல் காலத்தில் — எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை புனரமைப்பதற்காக 10 கோடி ரூபாவை பிரதமர் சந்திரிகா ஒதுக்கியிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. நூலகம் எரிக்கப்பட்டது குறித்து விசாரிக்க நான்குபேர் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க புதிய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகவும் —

அந்த நால்வரில் இருவரை அரசு நியமிக்கும் என்றும் — மற்றைய இருவரின் இடத்துக்கும் விடுதலைப் புலிகள் பொரிசு செய்யும் இருவர் நியமிக்கப்படுவர் என்றும் —

இது தொடர்பாக இருவரின் பெயர்களை பொரிசு செய்யும்படி ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளது என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் நவீன பொது நூலகம் ஒன்றை அமைப்பதற்கான வரைபட வடிவமைப்பு வேலைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-3)

நூலகப் புனரமைப்புக்கு மூவர் கொண்ட குழு

புலிகள் பிரதிநிதியும் ஒருவர்

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். பொது நூலகத்தைப் புனரமைப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை நியமிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இத்தகவலை ரூபவாஹினி வெளியிட்டது.

இக்குழுவில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவரையும் இடம்பெற செய்வது குறித்து ஆராயப்படுவதாக அரசுத் தரப்பு பிரதிநிதி ஒருவரை மேற்கோள்காட்டி ரூபவாஹினி அறிவித்தது.

உதயனுக்கு தொண்டா விசேட பேட்டி:

அரசு - புலிகள் பேச்சுக்கள் வெற்றி பெறுவது நிச்சயம்!

புலிகளுக்கும் புகழாரம் சூட்டுகின்றார்

கொழும்பு, ஒக். 24

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் நிச்சயம் வெற்றியளிக்கும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் உதயனுக்கு அளித்த விசேட பேட்டியில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

இப்பேட்டியின் போது விடுதலைப் புலிகளுக்கு புகழாரம் சூட்டும் வகையில் கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இ. தொ. காவின் அலுவலகத்தில் வைத்து உதயன் அலுவலகச் செய்தியாளருக்கு பிரத்தியேகப் பேட்டி ஒன்றை அவர் அளித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்பது குறித்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் பதவி மறுக்கப்பட்டதால் நடுநிலை வகிக்க தொண்டா முடிவு

கொழும்பு, ஒக். 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரை ஆதரிப்பதற்கு இ. தொ. கா. தலைவர் தொண்டமான் முன்வைத்த நிபந்தனையை பிரதமர் சந்திரிகா ஏற்கவில்லை.

வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

அமைச்சர் பதவி தமக்கு தரப்படவேண்டும் என்பதே தொண்டமான் முன்வைத்த அந்த நிபந்தனை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை ஏற்க பிரதமர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உருவாக்கிய அரசமைப்பை அப்படியே தூக்கி எறிந்து விடாதீர்கள்!

ஜே. ஆர். கோரிக்கை

கொழும்பு, ஒக். 24

1978 இல் நான் உருவாக்கிய அரசமைப்பை அப்படியே தூக்கி எறிந்துவிடாதீர்கள். அதில் பாதுகாக்கக் கூடிய தாராள ஜனநாயக சிந்தனைகள் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசமைப்பு சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அகில இலங்கை சோனகர் சங்கம் ஒழுங்கு செய்த இக் கருத்தரங்கு பண்டார நாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையில் சீர்திருத்தம் செய்வதன் மூலம் அதனைப் பாதுகாக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆயுள் காலத்தை நான்கு ஆண்டுகளாகக் குறைப்பது ஜனாதிபதியை நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லக் கூடியவராக மாற்றுவது சாதாரண சட்டத்துக்கு உட்பட்டவராக ஜனாதிபதியைக் கொண்டு வருவது ஆகிய சீர்திருத்தங்களை தற்போதைய ஜனாதிபதி முறையில் மேற்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய அரசமைப்பில் தாராள ஜனநாயக கொள்கைகளே கிடையாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. இரா. சம்பந்தனும் நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் அங்கு வாதிட்டனர்.

சமூகத்தின் ஒரு பிரிவினரின் தேவைகளைமட்டுமே பூர்த்தி செய்யக்கூடியதான இந்த அரசமைப்பு முறையை தாராள ஜனநாயக முறை என்று அழைக்கலாமா? — என்று திரு. சம்பந்தன் கேட்டார்.

பெரும்பான்மை சிங்கள தேசியவாதத்தையே தற்போதைய அரசமைப்பு பிரதிநிதித்துவம் செய்வதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய அரசமைப்பு முறைதான் தமிழர் ஆயுதப் போராட்டம் உதயமாவதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தாராளமயம் மற்றும் ஜனநாயகத்துக்கு முழு எதிரான அம்சங்கள் தான் 1978 அரசமைப்பில் உண்டு என்று அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

உத்தியோக தோரணையில் மட்டுமல்ல தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகக்கூட ஜனாதிபதி மீது சட்ட நடவடிக்கை எடுப்பதை 1978 அரசமைப்புச் சட்டம் தடை செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த அரசமைப்பு வாக்காளர்—எம்.பி. தொடர்பை துண்டித்து விட்டது என்றும் அவர் சொன்னார்.

கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 24

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த சதீஸ்குமார் சங்கீதா (வயது 6) என்ற சிறுமி நேற்று கிணற்றில் தவறி விழுந்து மரணமானார். [உ—13]

இரு அமைச்சர்களுக்கு எதிராகப் பிரேரணை?

முக்கிய இரு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஸ்ரீகோதா வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''லங்கா தீப சிங்கள நாளிதழ் இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அடுத்த நவம்பரில் பொதுத் தேர்தல்!

அரசு திட்டமிடுகின்றதாம்

அடுத்த ஆண்டு நவம்பரில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை மீண்டும் நடத்த அரசு திட்டமிட்டு வருகிறது.

''சண்டே ரைம்ஸ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தற்போதைய பொதுமக்கள்ஐக்கியமுன்னணி அரசுக்கு நிலையான பெரும்பான்மை இல்லாதிருப்பதாலும்—

பிற சிறு அரசியல் கட்சிகளை நம்பியே அரசை நடத்த வேண்டியிருப்பதாலும்—

தற்போதைய அரசு புதிய தேர்தலை நடத்த அறுதிப் பெரும்பான்மை கொண்ட அரசாக மாறத்திட்டமிட்டு வருவதாகவும் அமைச்சர் தர்மசிறி சேனநாயகா தெரிவித்தார் என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ—எ)

நிக்கவரெட்டியாவிலும் மனித புதைகுழி!

நாளை தோண்டப்படும்

கொழும்பு, ஒக். 24

நிக்கவரெட்டியாவில் உள்ளதாகக் கூறப்படும் மற்றொரு மனித புதைகுழியைத் தோண்டும்படி நிக்கவரெட்டிய மாவட்ட நீதிபதி திருமதி தென்னக்கூன் தடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

நிக்கவரெட்டிய —ஆண்டியகம வீதியில் தலக்கொவேவ அருகில் இருப்பதாகக் கூறப்படும் இம்மனித புதைகுழி நாளை பிற்பகல் தோண்டப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்ற உத்தரவை அடுத்து இப்பகுதியை பொலீஸார் காவல் புரிந்து வருகின்றனர்.

இப்புதைகுழியில் 1989 காலப் பகுதியில் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் பல இளைஞர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ—எ)

சந்திகளில் நின்று சீண்டும் குழுக்கள் மீது நடவடிக்கை

யாழ். நகர மற்றும் புறநகர் பகுதிகளில் தமிழீழ காவல்துறையினர் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகள், பொது இடங்கள், முக்கிய சந்திகள் மற்றும் மதகுகளில் குந்தி இருந்து வம்பளக்கும் கூட்டத்தினர் மீதே காவல்துறையினர் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகளில் கூடிநின்று வீண் பொழுது போக்குவதுடன் வழியால் போய் வருபவர்களையும் சீண்டும் கூட்டத்தினரின் நடவடிக்கைகள் குறித்து காவல்துறைக்கு கிடைத்திருக்கும் பல முறைப்பாடுகளை அடுத்தே நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரியவருகிறது.

காவல்துறையினரால் பிடித்துச் செல்லப்படுபவர்கள் சில மணி நேரத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ—51)

இந்தியா உட்பட அந்நிய சக்திகள் பேச்சுக்கு தடை போடக்கூடாது

சென்னை கருத்தரங்கில் உரை

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு இந்தியா உட்பட அந்நியச் சக்திகள் தடையாக இருக்கக் கூடாது.

கொழும்பில் உள்ள பிராந்திய மேம்பாட்டுக் கல்வி நிலைய பேராசிரியரும் லண்டன் பொருளியல் கல்வி நிலையத்தின் கௌரவப் பேராசிரியருமான திரு. சூரியகுமாரன் சென்னையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''அதிகாரங்களைப் பகிர்தல் — இலங்கை அனுபவம்'' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கடந்த திங்களன்று நடந்த கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டுள்ள பிரபாகரன் குறித்து இந்தியத் தரப்பில் சட்டரீதியாக சிக்கல்கள் எழுப்பப்படக்கூடும். அவ்வாறு செய்வதை இந்திய அரசு தவிர்க்க வேண்டும்.

சந்திரிகாகுமாரதுங்க இலங்கைப் பிரதமராகப் பதவியேற்றுள்ளது தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை காரணமாக இலங்கைப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் விரைவில் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட வேண்டும் என சிங்கள மக்கள் விரும்புகின்றனர்.

— என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (இ-ஐ)

யுத்த நிறுத்தம்;...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதி ஒருவர், அது யுத்த நிறுத்தத்துக்கான ஆரம்ப வழி என்றார்.

இன்று நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் பின்னர் இராணுவ நடவடிக்கை மேலும் குறையும் என்றும்

அது போர் நிறுத்தத்தை நோக்கிய ஒரு படிமுறையாக இருக்கும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

இன்றைய பேச்சுவார்த்தைகள் யுத்த நிறுத்தத்துக்கான ஆக்கபூர்வமான முடிவுகளைத் தரும் என எதிர்பார்க்கலாம் என்றும்—

அத்தகைய முடிவு எட்டப்படாவிட்டால் இவ்விடயம் குறித்து மேலும் பேசுவதற்காக அடுத்த வாரம் பாதுகாப்பு பிரதியமைச்சர் கேணல் அனுருத்தை ரத்வத்த யாழ்ப்பாணம் வரவேண்டியிருக்கும் என்றும் மேலும் கூறப்பட்டது.

பூநகரிப் பாதை

பூநகரிப் பாதையை பொது மக்களின் பாவனைக்காகத் திறப்பது குறித்தும் இன்றைய பேச்சுக்களின் போது கூடிய எவ்வளவு கவனம் செலுத்தப்படும்.

பூநகரிப் பாதையைத் திறப்பதானால் அப்பாதையை துப்பரவு செய்தல் மற்றும் வீதிதிருத்த வேலைகளை மேற்கொள்ளல் ஆகியவைதொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தீர்மானிக்கப்படும்.

அனேகமாக அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பூநகரிப் பாதையைத் திறப்பதற்கான ஏற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் எனத் தாம் நம்புவதாக அரசுத் தரப்புப் பிரதிநிதி ஒருவர் கடந்தவெள்ளியன்று கொழும்பில் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடல் வலய தடைச் சட்டம்

கடல்வலய தடைச் சட்டம் குறித்தும் இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்க அரசு கொள்கையளவில் இணங்கியுள்ளதாகவும்—

எனினும் அது குறித்து இறுதியான முடிவை அமுல்படுத்த முன்னர், வடபகுதி மீனவர்களுக்கு இடைக்கால ஏற்பாடாக குறிப்பிட்ட சில பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதி அளிப்பது என அரசு முடிவு செய்திருப்பதாகவும் அறிய வந்தது.

எனினும்—

யுத்த நிறுத்தம் குறித்து தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்பட்டு விட்டால் கடல் வலயத் தடைச் சட்டம் என்ற பிரச்சினையே இல்லாமல் போய் விடும் என அரசத் தரப்புப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

புனரமைப்பு

யாழ். மாவட்டத்தின் அவசர புனரமைப்பு பணிக்கு 50 கோடி ரூபாவை பிரதமர் சந்திரிகா ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் —

இதுபற்றிய தகவல் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளினால் இன்றைய பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவசரமாக செய்யப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளை அடையாளம் கண்டு அட்டவணைப் படுத்துவதில் இரு தரப்பினரும் இன்று ஈடுபடக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. (உ—3)

கௌரி காப்பு

திருகோணமலை

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கேதாரகௌரி விரதகாப்பு இம்முறையும் வழமைபோல் யாழ். கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் 3 - 11 - 94 வியாழக்கிழமை நண்பகல் 11.00 மணி பூசையை தொடர்ந்து காப்பு வழங்கப்படும். காப்பு எடுக்கும் அடியார்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

இங்ஙனம்,

போ. இரவிச்சந்திரக்குருக்கள்

(ஆதீனகர்த்தா, பிரதமகுரு)

பத்திரகாளி கோவில், திருகோணமலை.

தகவல்:

பொ. கிருஷ்ணமூர்த்திசர்மா

(ஆலய நிர்வாகம்)

இலங்கைநாயகி மனோன்மணி அம்மன் கோவில்

பருத்தித்துறை வீதி,

கல்வியங்காடு, நல்லூர்.

(3350 1)

இந்துமத குருமார் ஒன்றியம்

தென்மராட்சிக் கிளை

புதிய நிர்வாகசபை தெரிவு

தலைவர்: சி. சிதம்பரநாதக் குருக்கள்
செயலாளர்: தி. நிஷ்ணமூர்த்திக் குருக்கள்
பொருளாளர்: ச. சிவகடாக்ஷக் குருக்கள்
உப தலைவர்: கி. சோமசுந்தரக் குருக்கள்
உப செயலாளர்: ச. சோமாஸ்கந்தக்குருக்கள்

ஆகியோர் உட்பட 15 பேர் கொண்ட புதிய நிர்வாகசபை 23-10-94 அன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சாம் - சோமாஸ்கந்தசர்மா

யாழ் மாவட்ட செயலாளர்,

(33500) இந்துமத குருமார் ஒன்றியம்.

சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின்

மகாநாடும் கலைநிகழ்வும்

1995 ஆம் ஆண்டு தை மாதம் இரண்டாம் நாள்

நிகழ்வுகளில்.....!

1) அனைத்து கிளைப் பிராந்தியங்களிலிருந்தும் தெரிவாகும் சிறந்த மும்மூன்று நிலையங்களுக்கு ''நற்சான்றிதழ்'' பாராட்டுப் பத்திரம் வழங்கல்.
2) சிறந்த மூன்று கிளைச் சங்கங்களுக்கு 'நற்சான்றிதழ்' பாராட்டுப் பத்திரம், ஞாபகார்த்த கேடயம் வழங்கல்.
3) மகாநாடு நினைவாக 'மலர்' வெளியீடு
4) அனைத்து கிளை உறுப்பினர்களின் 'கலை நிகழ்வுகள்' (நடனம், நாடகம், வில்லுப்பாட்டு)
5) நீண்ட காலங்கள் சமாசம், சங்கங்களில் பதவி நிலை வகித்து பணியாற்றியவர்களை கௌரவித்தல்.
6) சிறப்பு உரைகள்.
7) தொழிலாளர் நலன் திட்டம் அமுலாகுதல்.

அன்பான உறுப்பினர்களே! விழா நிதிப்பங்களிப்பினை மகிழ்வுடன் வழங்கிடுவீர்!

விளம்பர அன்பளிப்பு:

ப. பத்மநாதன் 'லிபேட்டி' மோட்டஸ்

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

வாகன உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

சி. கணேசலிங்கம் 'தமிழ்பூங்கா' அச்சகம்

முதன்மை சாலை, நெல்லியடி.

பல வர்ணங்களில் அழகான அச்சு வேலைகளுக்கு உகந்த இடம்.

ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்

முதன்மை சாலை, நெல்லியடி.

நியாயமான விலையில் அழகிய ஆடைவகைகளுக்கு நாடுங்கள்.

வ. பி. - சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்.

செயலாளர்

(33498)

கண்ணீர் அஞ்சலி

சாண்டோ துரையண்ணா!
வீரத்தை விளைவித்தாய்
காலனிடம் மட்டும் ஏன
களைத்து விட்டாய்.

கண்ணீர்பூக்கள் தூவும்

பரு. ஐக்கிய வி. கழகம்.

பருத்தித்துறை.

(33506)

கண்ணீர் அஞ்சலி

சாதனைச் சிகரம்
சாண்டோ துரையண்ணாவே,
சாவு எப்படி சாத்தியமானது?

கண்ணீரால் அர்ச்சிக்கும்

நெப்போலியன் வி. கழகம்

பருத்தித்துறை.

(33505)

ஸ்ரீவிநாயகர் துணை

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஐப்பசித்திங்கள் 7 ஆம் நாள் (24-10-94) திங்கட்கிழமை பகல் 12. 21 மணி முதல் 01. 24 மணி வரையுள்ள மிருகசிரிட நட்சத்திரமும், மகர லக்கினமும், அமிர்தசித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு. திருமதி காசப்பிள்ளை
(புங்குடுதீவு 7)
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
திருவருட் செல்வன்
கனகரெத்தினம்
(ஆனந்தன்)
அவர்கட்கும்

திரு. திருமதி சண்முகானந்தன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
அவர்களின் சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
சுஜாதா
(சுதா)
அவர்கட்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சுற்றம்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி காசிப்பிள்ளை (இலங்கை) திரு திருமதி சு. சண்முகானந்தன் (ஜேர்மனி)

திரு. திருமதி ச. பாலசிங்கம் (ஜேர்மனி)
அமரர் திரு. திருமதி கா. பாலசிங்கம்
திரு. திருமதி கா. திருநீலகண்டன் (யாழ்ப்பாணம்)
திரு. திருமதி கா. ராசலிங்கம் (யாழ்ப்பாணம்)
திரு. திருமதி கா. கந்தசாமி (கொழும்பு)
திரு. திருமதி கா மார்க்கண்டு (ஜேர்மனி)

திருமணம் நடைபெறும் இடம்;

Sparthallasv Reiskirchen,
Am Sportplatz,
66424 Homburg/Saar
GERMANY

(33502) மணமகன் கா. திருநீலகண்டன்

கடை தேவை

நல்லூர் சுற்றாடலில், பலசரக்கு வியாபாரம் செய்யக்கூடிய, கடை வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ளவும்.

த. றதீஸ்வரன்

71, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(33499)

ஆத்மார்த்த அஞ்சலி

21- 10- 94 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த சிவஸ்ரீ க.த. சிவபாதசுந்தரக்குருக்கள் (கணேஸ் ஐயா) அவர்களுக்கு எமது ஆத்மார்த்த அஞ்சலியை காணிக்கையாக செலுத்துகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

ஆதீனகர்த்தாக்கள்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
திருநெல்வேலி.

(33504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படை மீது மீண்டும் தாக்குதலுக்கு புலிகள் தயார்

ராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஒக். 24

வடபகுதி கடலில் கடற்படையினர் மீது இன்னொரு தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக, வடபகுதி போர் முனையில் உள்ள இராணுவ பேச்சாளர் ஒருவர் மேற்கோள் காட்டி "தமிழ்லண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடபகுதி கரையோரப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் படகுகளின் நடமாட்டம் காணப்படுவதாகவும்—

இப்படகுகளில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பிரிவுகள் மற்றும் கடற்புலிகள் இருக்கலாம் என்றும் பாதுகாப்புப் படையினர் சந்தேகப்படுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் படகுகளின் நடமாட்டங்களை நுணுக்கமாக படையினர் அவதானித்து வருவதாகவும் அந்த இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை—

மன்னார் முதல் மாதகல் வரையான கடலோரப் பகுதிகளில் தாக்குதல் நடத்த விடுதலைப்புலிகள்திட்டமிட்டு வருவதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கடலோரப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று பாதுகாப்புப் படையினர் கல்பிட்டி மீனவர்களை எச்சரித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

மாநகராட்சி மன்றத்துக்கு சிமெந்து

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்துக்கு 200 பைக்கெற் சிமெந்து கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளது.

மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதியில் சிறுசிறு வேலைகளை மேற்கொள்ளுவதற்கே இந்த சிமெந்து பாவிக்கப்படும் என மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

வேட்பாளர்களை அங்கொடையில் சோதனை செய்வது அவசியம்

மற்றொரு வேட்பாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 24

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலரின் மனோநிலை பற்றி அறிந்து கொள்ள அங்கொடையில் இருந்து அறிக்கை பெறவேண்டும்.

சுயேச்சை வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. கவின் முன்னாள் எம்.பியான ஹட்சன் சமரசிங்கா முன்கண்டவாறு தெரிவித்துள்ளார். (உ-எ)

ஸ்ரீலங்கா தேசியகொடியை பேச்சுக்கு நாம் எடுத்துச் செல்ல தேவையில்லை!

- லயனல் தகவல்

கொழும்பு, ஒக். 24

வேறு ஒரு நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தச் செல்வதானால் மட்டுமே நாம் ஸ்ரீலங்காவின் தேசியக் கொடியை எடுத்துச் செல்ல வேண்டும்; யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது நாம் தேசியக் கொடியை எடுத்துச் செல்லவில்லை என்று குற்றச்சாட்டு ஆதாரமற்றது; சமாதானப் பேச்சுக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடியது.

— தகவல்துறை அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கயேச்சை வேட்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் வானொலி மூலம் நடத்திய பிரசார உரையில் —

முதற்கட்ட பேச்சுக்களை நடத்த யாழ். சென்ற அரசுக் குழு தம்முடன் தேசியக் கொடியை எடுத்துச் செல்லவில்லை என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்குமுகமாக வெளியிட்ட அறிக்கையிலேயே திரு. பெர்னாண்டோ முன்கண்டவாறு விளக்கம் அளித்தார்.

"பூநகரி - சங்குப்பிட்டி பாதை, ஆனையிறவு இராணுவ முகாமுக்கு அருகில் உள்ளது என்றும் அந்த வேட்பாளர் தனது பேச்சில் கூறியிருக்கிறார். அது தவறான கூற்று. ஆனையிறவு இராணுவ முகாம் பூநகரியில் இருந்து பல மைல்கள் தூரத்தில் உள்ளது.

இப்படியான தவறான கருத்துகளை தெரிவிப்பது சமாதானப் பேச்சுகளுக்கு இடையூறாக அமையும். சமாதானத்தை குழப்பும் சக்திகளின் நோக்கம் இப்போது தெளிவாகி விட்டது. — இவ்வாறு திரு. லயனல் பெர்னாண்டோ தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் சந்திரிகாவுக்கு ஆதரவாக

கிழக்கில் ஈ. பி. ஆர்.எல்.எவ். சுவரொட்டிப் பிரசாரம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு ஆதரவு கோரி கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.அமைப்பு சுவரொட்டிகளை ஒட்டி வருகிறது.

"இனஐக்கியம், சமாதானம் ஏற்படமுயற்சிக்கும் சந்திரிகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்போம்" என சுவரொட்டிகளில் குறிபிடப் பட்டுள்ளது.

இதேவேளை வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகியன போட்டி போட்டுக் கொண்டு சந்திரிகாவுக்கு ஆதரவு திரட்டும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

கருத்தரங்கு

பாடசாலை மாணவர்களுக்கென தொழில் வழிகாட்டி கருத்தரங்கு ஒன்றை யாழ். றோட்டறக்ட் கழகம் இன்று பிற்பகல் 1-00 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளது. றோட் டேறியன்கள் ஏ. குகமூர்த்தி, திருவாதவூரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

காமினி ஜனாதிபதியாவது

கோழிக்கூட்டுக்கு நரியை காவல் வைத்தது போல!

பிரதமர் சந்திரிகா கிண்டல்

கொழும்பு, ஒக். 24

காமினி திஸநாயக்காவை ஜனாதிபதியாக்குவது கோழிக் கூட்டுக்கு நரியைக் காவல் வைத்தது போன்று தான் இருக்கும்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா முன்கண்டவாறு திஸ்ஸமகரகமவில் நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

கொழும்பில் பெறுமதி வாய்ந்த காணித்துண்டுகள் எல்லாம் சிறுதொகைப்பணத்துக்கு விற்கப்படவிருந்தது. எமது அரசு பதவிக்கு வந்ததும் இந்த மோசடிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் ஒரு கட்சியின் நண்பர்கள் நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள எனது அலுவலகத்தில் என்னைச் சந்தித்தனர். ஒரு குறிப்பிட்ட காணியை விற்றால் ஐந்து கோடி ரூபா தருவதாக அந்த நண்பர்கள் என்னிடம் தெரிவித்தனர். முந்திய அரசின் அமைச்சர்களுடன் அவர்கள் எப்படி பழகியிருப்பார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்.

எனக்குக் கிடைக்கும் சம்பளம் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் போதும். எனது அமைச்சரவையில் அயோக்கியர்கள் இல்லை.

இம்மோசடியில் ஈடுபட்ட அமைச்சர்கள் எல்லாரும் காமினி திஸநாயக்காவின் கட்சியைச் சேர்ந்தவர்களே ஆவர் — என்றார். (உ-எ)

தடுத்து வைக்கப்பட்டுள்ள

தமிழ், சிங்கள இளைஞர் 600 பேரை விடுவிக்க முடிவு

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 600 சிங்கள, தமிழ்க் கைதிகளை விடுவிக்க நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 200 பேரை உடனடியாக விடுவிக்கும்படி பதில் சட்டமா அதிபர் ஷிப்லி அளீஸ் சிபார்சு செய்துள்ளார்.

இந்த 200 பேரில் 74 பேர் மீது மேல் நீதி மன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ் வழக்குகளை வாபஸ் பெறும் படி பதில் சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய 400 கைதிகளை விடுவிப்பது பற்றிய பரிசீலனை தீவிரப் படுத்தப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

காமினியை ஆதரிப்பதன் மூலம்

மு. காங்கிரஸுடன் உறவு: லிபரல் கட்சி முறித்தது

கொழும்பு, ஒக். 24

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட்ட லிபரல் கட்சி இப்போது முஸ்லிம் காங்கிரஸுடன் உறவை முறித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

லிபரல் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க வேட்பாளரான காமினி திஸநாயக்காவை ஆதரிக்கத் தீர்மானித்திருப்பதால் அக்கட்சியுடனான எமது தொடர்புகள் பெருமளவில் அறுந்து விட்டன என்று முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான ரஊப் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் மூலம் ஸீஎம். பியான — லிபரல் கட்சிப் பிரமுகர் — அனித பெரேரா தங்களது நிலைப்பாட்டை ஏற்று ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிக்கிறார் என்றும் அவர் சொன்னார்.

இதே வேளை —

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க வேட்பாளர் காமினி திஸநாயக்காவை லிபரல் கட்சி ஆதரிக்கும் என்பதை அக் கட்சியின் தலைவர் டாக்டர் சணக அமரதுங்க உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கிறார்.

கட்சியின் இம் முடிவுக்கு மூன்று காரணங்களை அவர் தெரிவித்துள்ளார்.

★ ஜனாதிபதி பதவிக்கு உகந்தவர் காமினியே.

★ இனப்பிரச்சினை மற்றும் அரசமைப்பு சீர்திருத்தம் ஆகிய தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நிலைப்பாட்டை காமினி கடைப்பிடித்து வருகிறார்.

★ ஐ. தே. க — லிபரல் கட்சி ஆகியவற்றுக்கு இடையில் முன்பு இருந்த உறவைப் பாதிக்குமாறு போல ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்த நடவடிக்கைகள் இப்போது கைவிடப்பட்டுள்ளன.

— இவையே அக் காரணங்களாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் மூலம் லிபரல் கட்சித் தலைவர் சணக அமரதுங்க எம். பியாகத் தெரிவானதும் —

பிரதமர் சந்திரிகாவின் ஆட்சேபத்தை அடுத்து சணகவின் இடத்துக்கு அவரது கட்சியைச் சேர்ந்தவரும் சந்திரிகாவின் உறவினருமான அனித பெரேராவை முஸ்லிம் காங்கிரஸ் நியமித்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-எ)

சைக்கிளோட்ட போட்டிகள்

யாழ்ப்பாணப், ஒக்.24

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் மாவட்ட தடகள விளையாட்டு விழாவினைபொட்டிய—ஆண்கள், பெண்களுக்கானசையிக்கிள் ஓட்டப்போட்டிகள்— நாளை காலை- 6-30 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகமுன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிகளில் பங்குபடும்சகல போட்டியாளர்களையும் நாளை காலை 6-00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுள்ளது. (உ)

அங்கும்புர மனித புதைகுழியில்

துப்பாக்கி சன்னக் கோவை எலும்புக் கூடுகளுடன் மீட்பு

கண்டி, ஒக். 42

கண்டி மாவட்டம் அங்கும்புர பகலகுத்துங்கொல்ல அரசமரத்திற்கு அருகில்,மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் புதைகுழி—

கடந்த 13 ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 தினங்கள் தோண்டப்பட்டு, 31 சடலங்களின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை தோண்டப்பட்ட புதைகுழிகளில் இருந்து மிகவும் பயனுள்ள தகவல்கள் கிடைத்திருப்பதாக வைத்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புதைகுழி தோண்டப்படும் போது ரி 84 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப் படும் சன்னக் கோவைகள் இரண்டும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. இவற்றோடு மோதிரம், சைக்கிள் சாவிகள், செருப்புகள் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன.

சடலங்களில் பெரும்பாலானவை நல்ல நிலையில் இருப்பதாகவும், குறைந்தது 20சடலங்களையேனும் அடையாளம் காண முடியும் எனவும் வைத்திய அதிகாரிகள் கூறுகின்றனர். (ஒ)

மல்யுத்தப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடத்த வுள்ள விளையாட்டு விழாவையொட்டி இரு தினமும் இரவு வேளை நிகழ்சியாக மல்யுத்தப் போட்டி இடம் பெறவுள்ளது. மல்யுத்தப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் விளையாட்டுத்துறை வட்ட இணைப்பாளர்களிடம் அல்லது கோண்டாவிலில் உள்ள அரசியல்துறை மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது. வெற்றியீட்டுவோருக்கு பல பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

வேட்புமனு தாக்கலின் பின் 98 வன்முறைச் சம்பவங்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதில் இருந்து இதுவரை 98 வன்முறைச் சம்பவங்கள் நாடு முழுவதும் இடம் பெற்றுள்ளன என்றும் —

பிரசாரங்கள் ஆரம்பமான பின்னர் கடந்த புதன்கிழமை வரை நாடுமுழுவதும் 16 வன்செயல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்றும்—

பொலீஸ் தேர்தல் பணியகம் தெரிவித்துள்ளது (ஒ)

ஓஷன் டிரேடருக்கு பதிலாக புதிய கப்பல்

கொழும்பு, ஒக். 24

"ஓஷன் டிரேடர்" கப்பலுக்குப் பதிலாக இன்னொரு கப்பலை சேவைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்கும்படி கப்பற் போக்குவரத்துக் கூட்டுத் தாபனத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கைப்பற்போக்குவரத்து, துறமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இம்மாத முற்பகுதியில் "ஓஷன் டிரேடர்" கப்பல் வெற்றிலைக்கேணிக் கடலில் வைத்து விடுதலைப்புலிகளினால் மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-எ)

அரசு - புலிகள் பேச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவின் நிர்வாகசபை அன்றைய தினம் மாலை கூடி ஆராயவிருப்பதால், அது பற்றிய முடிவை அறிவதற்கு இரவுவரை காத்திருக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

இனப்பிரச்சினை விடயம் குறித்து அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

பேட்டிகள் வருமாறு:-

கேள்வி: புதிய பிரதமர் சந்திரிகா தற்போதைய சமாதானப் பேச்சுகளில் வெற்றியீட்டுவார் என்று நம்புகிறீர்களா?

தொண்டா; அவரின் முயற்சி நிச்சயம் வெற்றியீட்டும் என்று நம்புகிறேன், சந்திரிகா புதிய சிந்தனை, புதிய பார்வையுடன் சமாதானப் பேச்சில் ஈடுபட்டுள்ளார். டி. எஸ். சேனநாயக்கா முதல் தற்போதைய ஜனாதிபதி வரை— ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உட்பட — அனைத்து பிரதமர்களும் ஜனாதிபதிகளும் இனவாதிகளாகவே இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் சந்திரிகா இன, மத வேறுபாடுகளைப் பார்க்காத, இனவெறிவாதமற்ற கொள்கையுடைய தலைவராக விளங்குகின்றார். அவரின் சீரிய கொள்கைகள் காரணமாக பேச்சுவார்த்தை வெற்றிபெற்று தீர்வுகாணப்படும் என்று நம்புகின்றேன்.

எனது 50 வருட கால அரசியல் அனுபவத்தை வைத்து கணிக்கும்போது சந்திரிகாவின் காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுவரும் என்று திடமாக நம்புகின்றேன்.

புலிகளுக்கு புகழாரம்

கேள்வி: கடந்த 40 ஆண்டுகளாக தமிழர் போராட்டம் நடத்தி வருகின்றார்கள். இன்றுள்ள போராட்ட வடிவத்தை நீங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. அன்றைய தமிழர் பலத்தையும் இன்றைய பலத்தையும் ஒப்பிட்டுக்கூற முடியுமா?

தொண்டா: எமது வரலாற்றில் ஓர் அரசியல் மாற்றம் இறங்கி வந்து பேச்சுகள் நடத்தக்கூடிய காலம் வந்ததற்கு புலிகளின் நிலையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தான் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களோ, மலையகத் தமிழர்களோ மட்டுமன்றி அகில உலகத்திலும் உள்ள தமிழர்களின் பலமான சக்தியாக விடுதலைப் புலிப் படையினர் தான் இன்று விளங்குகின்றனர்.

மறத் தமிழர் பரம்பரைக்கு பெருமை தேடித் தந்த சக்தி விடுதலைப் புலிகள் தான். அவர்களின் தியாகமும் உறுதியான போக்கும் தான் இன்று தமிழன் பலமான நிலையில் நிற்கக் காரணமாகின்றது; அதுவே பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசை இறங்கிவரச் செய்துள்ளது.

தமிழனின் மானத்தை காத்த வீரர்கள் புலிப்படையினர். அவர்கள் வழியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்; சந்திரிகாவுடன் நடத்தப்படும் பேச்சுகள் வெற்றி பெறும்; அதன் மூலம் உலகத் தமிழன் தலை நிமிர்ந்து நிற்பான்.

பிரபாவின் தலைமை

கேள்வி: விடுதலைப் புலிகள் பற்றி தங்கள் கருத்து...?

தொண்டா: திரு. பிரபாகரன் தலைமையின் கீழ் அவர்கள் செயல்படுகிறார்கள். இன்று உலகத் தமிழன் தலை நிமிர்ந்து நின்று அரசுடன் பேசக் காரணமாக இருப்பவர் திரு. பிரபாகரன் தான்.

உறுதியான போக்கும் தியாகத்தின் உயர்வும் அவரது வெற்றிக்குக் காரணமாகும்.

ஒரு தடவை திரு. பிரபாகரனைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது; அருமையானவர், உறுதியில் உண்மையானவர்.

புலிகளுடன் நில்லுங்கள்!

கேள்வி: யாழ்ப்பாண மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

தொண்டா: விடுதலைப் புலிகளின் படையினரும் தமிழ் மக்களும் வாழ்வதற்கு உள்ள ஒரு பிரதான அரணில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஒரு சிலரும் கூறுகின்றனர். இதற்கு இடம் கொடுக்காமல் விடுதலைப் புலிகள் செயற்பட வேண்டும்.

எத்தனையோ தியாகங்களைச் செய்து பலமான நிலையை விடுதலைப் புலிகள் உருவாக்கியிருக்கும் இவ் வேளையில் யாழ். மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். நாள் தமிழினத்தின் ஒரு தலைவராக இருப்பதால் தமிழ் மக்களுக்கு இவ்வேண்டுகோளை விடுக்கின்றேன். புலிப்படையினரும் தமிழர்களும் ஒன்று தான் வேறு அல்ல என்பதை உணர்ந்த வேண்டும்

கேள்வி: இனப்பிரச்சினை தீர்வு குறித்து தங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

ஐ. தே. க. தவறிவிட்டது

தொண்டா: கடந்த கால ஐ. தே. க. அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறிவிட்டது. அந்த அரசின் ஓர் அமைச்சராக நான்இருந்த போது பல வழிகளிலும் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டேன். அதற்கு அந்த அரசு தயாராக இல்லை.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண யாருமே இதுவரை முயற்சிக்காத அளவுக்கு இன்றைய அரசாங்கம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

இதற்கு நானும் எனது தலைமையிலான ஐ. தொ. காவும் பூரண ஆதரவை வழங்கத் தயாராகவிருக்கின்றோம்.

இங்கு ஒன்றை மட்டும் கூறவேண்டியுள்ளது. தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளிக்கும் புதிய அரசு மலையகப் பகுதி பற்றி சிந்திக்கக் கூடவில்லை. இதற்காகவே நாம் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளோம். எமது பிரச்சினை பற்றி பேசும் போது தமிழர் பிரச்சினையைத் தள்ளிவிடுவோம் என்று அர்த்தமல்ல.

இந்தியாவின் நிலைப்பாடு

கேள்வி: சமாதானப் பேச்சு குறித்த இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

தொண்டா: பேச்சுகள் வெற்றி பெற இந்தியா முடிந்தளவு உதவி வழங்கும்.

கேள்வி: இப் பேச்சுவார்த்தையை இந்தியா குழப்பமாட்டாது என்று கருதுகிறீர்களா?

தொண்டா: இந்தியாவின் தற்போதைய தலைமைத்துவத்தால் தங்களின் பிரச்சினைகளையே தீர்க்க முடியாமலுள்ளது. அப்படியிருக்கும் போது, ஏன் இலங்கை இனப் பிரச்சினைக்குள் இந்தியா மீண்டும் தலையிட வேண்டும்?

நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி போன்றவர்கள் இனப்பிரச்சினையில் தலையிட்டனர். தமது நாட்டுக்கு அச்சுறுத்தலாக இலங்கை இனப்பிரச்சினை இருக்கும் என்று அவர்கள் கருதினர். ஆனால் இன்றைய இந்தியாவின் அரசியல் தலைமையோ இனப்பிரச்சினையில் தலையிடவோ அல்லது அதற்காக ஒரு கொள்கையைக் கொண்டிருக்கவோ அல்லது இப்படியான ஒரு தீர்வு தான் வர வேண்டும் என்று சிந்திக்க முடியாத நிலையில் உள்ளது.

ஆகவே விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் பேச்சுகளை இந்தியா குழப்பமாட்டாது; ஆதரவு வழங்கும்.

கேள்வி: அண்மையில் இந்தியா சென்ற நீங்கள் இது பற்றி இந்திய அரசு அதிகாரிகளுடன் பேசினீர்களா?

தொண்டா: தனிப்பட்ட விஜயமாகச் செல்வதால் இது பற்றி நான் அவர்களுடன் பேசவில்லை; பேசவும் நான் முயற்சிக்கவும் இல்லை.

அஷ்ரப்புடன் தயாரித்த திட்டம்

கேள்வி: நீங்களும் முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் அஷ்ரப்பும் சேர்ந்து தயாரித்த இனப் பிரச்சினைத் தீர்வுத்திட்டம் எப்படி இருக்கிறது?

தொண்டா: சந்தர்ப்பம் வரும் போது இத்திட்டம் குறித்து அக்கறை காட்டுவோம்.

விஜேதுங்கா தடுத்தார்

கேள்வி; யாழ். சென்று விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த ஐ.தே.க அரசின் காலத்தில் திட்டமிட்டிருந்தீர்கள். இப்போதும் அப்படி ஒரு திட்டம் தங்களிடம் உண்டா?

தொண்டா: ஐ.தே.க அரசின் காலத்தில் நான் யாழ். செல்ல திட்டமிட்டேன் அதனை ஜனாதிபதி விஜேதுங்கா தடுத்து விட்டார். நான் யாழ்.செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு சந்திரிகா என்னைக் கேட்டால் நான் யாழ்.சென்று திரு. பிரபாகரனுடன் பேசத்தயாராக இருக்கின்றேன்.

கேள்வி: ஐ.தே.க. அரசின் காலத்தில் அமைச்சராக இருந்தும் இ. தொ. கா. தலைவர் என்ற முறையில் தான் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப் போவதாகக் கூறியிருந்தீர்கள். இப்போது இ. தொ. கா. தலைவர் என்ற முறையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த யாழ். செல்ல விரும்பவில்லையா?

தொண்டா: அன்று ஐ. தே. க. அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக பேச்சு நடத்த தயாராக விருக்கவில்லை. அதனால் அரசில் இருந்து கொண்டே அமைச்சர் என்ற முறையில் அல்லாது இ. தொ. கா. தலைவர்என்ற ரீதியில்செயல் திட்ட அலுவல்களைச் செய்தேன். ஆரம்ப நடவடிக்கைகள் வெற்றியளித்திருந்தால் நிச்சயமாக அமைச்சர் என்ற வகையிலும் அரசின் பிரதிநிதி என்ற வகையிலும் பேச்சுகளை தொடர்ந்திருப்பேன். அந்த நிலையை உருவாக்க ஐ. தே. க. அரசு தவறிவிட்டது.

இன்று நிலை வேறு விதமாக மாறி விட்டது. தமிழன் என்ற ரீதியிலோ, இ. தொ. கா. தலைவர் என்ற முறையிலோ நான் பேச வேண்டிய நிலை இன்று இல்லை. அரசாங்கமே நேரடியாக விடுதலைப் புலிகளுடன் பேசும் சூழ்நிலை இன்று உருவாகி விட்டது.

அரசு நடத்தும் சமாதானப் பேச்சுகள் வெற்றிபெற வேண்டும் என்று நான் மட்டுமல்ல சகல மக்களுமே விரும்புகின்றார்கள். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பிறிமா புறொயிலர் குஞ்சுகளும், பிறிமா கிவப்பு பேட்டுக் குஞ்சுகளும், நன்கு உக்கிய கோழி எருவும் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், 9, றக்கா வீதி, Barக்கு முன்பாக, யாழ்ப்பாணம். (33491)

புத்தகம்

உங்கள் நூல் நிலையத்திற்கு மிகவும் பொருத்தமான நூல்களை ஒரே இடத்தில் தேர்வு செய்திட நன்றே வாரீர். "ஆனந்தஸ்" பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33365)

நாவல், நாடகம்

மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள் 45 வருடங்களாக எழுதிவரும் அராலியூர் சுந்தரம்பிள்ளையின் "முதலாம்பிள்ளை" 10 நாடகங்கள் "அக்கரை சீமையில்" ஆபாசமற்ற சுவையான நாவல் பூபாலசிங்கம் புத்தகசாலை. (33360)

மணிக்கூடுகள்

புதிய கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு மட்டும் அவர்களின் பாவித்த கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். மணிக்கூடுகள், ரேடியோக்கள் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்), கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மாவிப்பாய்வீதி, ஆனைக்கோட்டை. (சி-9514)

புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது ஆண்டு 3, 4, 5 மாணவர்களுக்கு பயன்படக்கூடிய புலமைப் பரிசில் பயிற்சி 15 மாதிரிப் பயிற்சிகளையும் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 24 புதிய தமிழ் கட்டுரைகளையும் 14 ஆங்கிலக் கட்டுரைகளையும் விடைகளையும் கொண்டது. விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33480)

ஜேர்மனியில் பரதநாட்டிய அரங்கேற்றம்

பேர்லின் ஒக். 24

ஜேர்மன் தலைநகரம் பேர்லினில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாத இறுதியில் நடைபெறள்வுளது.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் மனல்தறையைச் சேர்ந்த திரு.சேகரின் புதல்வி செல்வி பிரசாந்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 28 ஆம் திகதி பேர்லின் காங்கிரஸ் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் தமிழகத்தைச் சேர்ந்த 'கலைமாமணி லக்ஷ்மி வில்வநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

செல்வி பிரசாந்தி, பரதநாட்டியக் கலையை பித்திகா சட்டர்ஜியிடம் பயின்றார். இவர் தமிழகத்தின் பிரபல நாட்டிய நர்த்தகி திருமதி லீலா சாம்சனின் மாணவியாவார். (அ)

இந்தியாவில் மூளை மலேரியா: 4ஆயிரம் பேர் பலி

புதுடில்லி, ஒக். 24

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் சுமார் 4 ஆயிரம் பேர் மூளை மலேரியா நோயினால் மரணமடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஐ-6)

சூழல்தின போட்டி பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

சூழல் தினத்தையொட்டி யாழ். பிரதேச செயலகம் நடத்திய கட்டுரை ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம், எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 1. 30 மணிக்கு செஸ் சாஸ்ல் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஒ-17)

பாவியுங்கள்

அண்ணா பற்பொடி

25 வெற்று பற்பொடி பக்கட்டுகளைக் கொடுத்து ஒரு அப்பியாசக் கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்,
இணுவில். [சி-9528]

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95 DAY CLASS

பிரிவு – 2

ஆசிரியர்	பாடம்	நேரம்
சௌந்தி	கணக்கியல்	8-00 — 9-30
பரில்	வர்த்தகம்	9-30 — 11-00
வரதராஜன்	பொருளியல்	11-00 — 12-30

★ வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

ஆரம்பம்: **25 – 10 – 1994**
செவ்வாய் 8 a. m.

[சி-9413]

பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
★ சாவகச்சேரி தெய்வேந்திரா

ஆகிய திரையரங்குகளில்
அகன்ற வெண்திரையில்

நிதர்சனமும்,
கலை, பண்பாட்டுக்கழகமும்
இணைந்து உருவாக்கிய

திரு. பொ. தாசனின்

"இன்னும் ஒரு நாடு"

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி
[சி-9343]

புதுமணத் தம்பதிகளுக்கு வாழ்த்துக்கள்

மணமகன்:
DR. கௌரிகாந்தன்
திருமலை வீதி, மட்டக்களப்பு.

மணமகள்:
செல்வி பிரியதர்சினி அமிர்தலிங்கம்
நடன ஆசிரியை, கந்தரோடை.

-கந்தரோடை அன்பர்கள்.

(சி/5732)

31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 22 — 02 — 1957

உதிர்வு: 24 — 09 — 1994

மரியாம்பிள்ளை றேமன்ட்

இன்று (24 – 10 – 1994) திங்கட்கிழமை காலை 6–15 மணிக்கு தாளையடி, புனித அந்தோனியார் ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இரங்கற் திருப்பலி இடம்பெறும்.

நீங்கா நினைவுகளுடன் நினைவு கூரும்;

அன்புத் தாயார், சகோதரிகள்,
தம்பிமார்கள்,
மருமக்கள்.

நகவல்:
செல்வி மரியாம்பிள்ளை றொசிற்றா.

ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் ஜெயந்தி தின விழா

ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் 67 ஆவது ஜெயந்தி தின விழாவான (24–10–1994) இன்று சுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக இவ் விழாவினை மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் கொண்டாடுகின்றார்கள்.

— முருகன் அடியார்கள்.

(7974)

G. S. லிங்கநாதன் அன் கோ

மலரும் தீபாவளியை மங்களமாய் கொண்டாட
மனநிறைவோடு அழைக்கின்றோம்.
கண்ணைக்கவரும் வகையில்
புத்தம் புதிய புடைவை தினுசுகள்

✶ காஞ்சிபுரம், வர்ணாசி, பெனாரில், மீனாக்றின்
✶ மைசூர் சில்க், ஷெஃபீர் சில்க், ஹைதராபாத் சில்க், ட்றோ சில்க்
✶ பூணம் சாறி, மைக்றோ ஷிபொன், எயர் போட், சூரத் சில்க், அப்பிள் சில்க்
✶ பிரியங்கா கொட்டன், பெங்கால் கொட்டன், காஞ்சி கொட்டன், சுங்குடிகொட்டன்
✶ பட்டுவேட்டி, சேட்டிங், சூட்டிங் சிறுவர் சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்

அனைத்தையும் தெரிவுசெய்து கொள்ள
இன்றே நாடுங்கள்

ச. லிங்கநாதன் வண்ணச்சோலை

13 — 14 (பெரியகடை வீதி)
சோதியா தெரு யாழ்ப்பாணம்.
(33396)

குறைக்கப்பட்ட கட்டண சேவை

E. C. G. என்னும் இருதய பரிசோதனை நோயாளரின் நலன் கருதி குறைக்கப்பட்ட கட்டண சேவையாக (ரூபா **100**/-) காலை, மாலை நடைபெறுகின்றது.

நிர்வாகி
எஸ். பாலன்

சம்பந்தர் மொடேர்ண்
வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்,
யாழ். வைத்தியசாலை முன்பாக,
சாந்தி தியேட்டர் ஒழுங்கை,
முதலாம் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

(33481)

அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீதசபைத் தேர்வுகள்-1995

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் 1994-11-01 செவ்வாய்க் கிழமை தொடக்கம் 1995-01-16 திங்கட்கிழமை வரை, சபைப் பணிமனையில், காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-.

1995ஆம் ஆண்டுத் தேர்வுக்காக, சபையால் அச்சிட்டு வழங்கிய படிவத்தில், அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். புகைப்படப் பிரதிகளிலும், தட்டச்சிலும் தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். 1995-01-16க்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொளளப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

1995ஆம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

தரம்-01 — ரூபா 50/-
தரம்-02 — ரூபா 75/-
தரம்-03 — ரூபா 100/-
தரம்-04 — ரூபா 125/-
தரம்-05 — ரூபா 200/-
தரம்-06 — ரூபா 250/-

மேலும் விவரங்கள் தேவைப்படின், சபைப் பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.

தி. பெரியதம்பி,
தங்கிப்பணிப்பாளர் (யாழ். வலயம்-01),
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

[சி-9428]

யுத்த நிறுத்தம் வரும் சாத்தியம் உண்டு

தென்பகுதியில் சந்திரிகா பிரசாரம்

கொழும்பு, ஒக். 24

விரைவில் யுத்த நிறுத்தம் தொடர்பான உடன்பாடு காணப்படும் சாத்தியம் இருப்பதாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கிறார்.

தென்பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை—

"எனது உயிருக்கு ஆபத்து இருப்பினும் சமாதானத்துக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடரும்" என்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்க மட்டக்களப்பில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.

எவரேனும் தமது உரிமைகளைக் கோரினால் அதை அடக்கி ஒடுக்குவதே ஐ. தே. கவின் நடவடிக்கையாகும்.

பிரித்தானும் கொள்கை மூலம் ஐ. தே. க தமிழ், சிங்கள மக்களிடையேயும், தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும் பிரிவினையை ஏற்படுத்தியது. இனங்களை ஒற்றுமைப்படுத்தி ஐக்கிய இலங்கையை தோற்றுவிப்பதே எமது சமாதான ஏற்பாட்டின் நோக்கமாகும் என்று பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தார்.

வடக்கு– கிழக்கு மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய—தமிழீழத்துக்குமாற்றீடான— ஒன்றை வழங்கியேயாக வேண்டும். அப்படியான ஒரு தீர்வை ஓரிரவில் கண்டுவிட முடியாது — என்று வெலிகமவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்திய ஆரம்பப் பேச்சுகள் வெற்றியளித்துள்ளன. கௌரவமரியாதையுடன் வாழக்கூடிய சமாதான சூழ்நிலை தோன்றவேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின்றனர் என்றும் அவர் அங்கு சொன்னார். (இ-எ)

24 கிராம சேவையாளர் திருமலையில் தவிப்பு!

தீவுப்பகுதி செல்ல வழி இல்லை

யாழ்ப்பாணம். ஒக். 24

வடக்கு – கிழக்கு மாகாணசபையால் தீவுப்பகுதிகளில் கிராமசேவையாளர்களாக கடமையாற்ற தெரிவு செய்யப்பட்ட 24 பேர் தீவுப் பகுதிக்குச் சென்று வேலையைப் பொறுப்பேற்கமுடியாத நிலையில் திருகோணமலை வந்து தங்கி உள்ளனர்.

தம்மோடு தெரிவு செய்யப்பட்ட ஏனைய பகுதி கிராம சேவையாளர்கள் பதவி ஏற்று மூன்று மாதங்கள் ஆகிவிட்டன என்றும்—

போக்குவரத்து வசதியின்மை காரணமாக தீவுப் பகுதி செல்லமுடியாதிருப்பதாகவும் — இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாண, உள்ளூராட்சி அமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கு தமது நிலை குறித்து இவர்கள் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். (இ)

யாழ். மத்திய கல்லூரியின்
உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம் பிற்பகல் **2 - 15**க்கு
JAFFNA COLLEGE VS. **J CENTRAL**

[33494]

ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 12 — 01 — 1940

இறப்பு: 05 — 11 — 1993

திருமதி
சோதியம்மா துரைசிங்கம்
திதி: 25 — 10 — 1994

ஓராண்டு எப்படியோ ஓடி மறைந்திடினும்
தீராத வேதனையோ தீபோல் எரிக்கு தெம்மை
ஊரார் வியக்க உன்பணியைச் செய்தாயே
சீராய்க் குடும்பம் சிறந்துயரச் செய்தனையே
நோயோ சர்பத்தாண்டு வருத்த நீ நொந்ததினால்
ஆயும் மருத்துவம் அனைத்தும் புரிந்தோம்பின்
வெகுமார்டாக்டர் இயலுமட்டும் சிகிச்சை செய்தார்
அவமாக அவைபோக அடைந்தோம் இருத்தலங்கள்
கொற்றா வத்தைதவில்
கோயில் கொண்ட கண்ணனையும்
மற்ற உடுப்பிட்டி மாபெரிய தம்பிரானையும்
நாம் நம்பி வழிபட்டு நலம் பெறநோய் தீரென்றோம்
ஏமாற்றம் அன்றி என்னபயன் கண்டோம்
நீயோ எமைப் பிரிந்து நிலவடி சேர்ந்தே
போயே மறைந்திட்டாய் புரிவது தான் என்னே?

குறிப்பு:
நாளை 25 – 10 – 1994 பகல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துயருறும்:

கணவன்: கோபால் துரைசிங்கம் ஜே.பி.
மக்கள்: திருமதி இ. லலிதா (சிமெந்துக் கூட்டுத்தாபனம் K. K. S.).
து. மோகன் (ஜேர்மனி).
து. வாசன் (நோர்வே).
செல்வி து. தேன்மொழி.
பேரப்பிள்ளை: செல்வி இ. ஜீவிதா.

"மோகன் இல்லம்"
வல்லை வீதி,
உடுப்பிட்டி. [7972]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அரசின் பொறுப்பு

அரசாங்கத்துக்கும் தமிழ் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை இன்று காலை ஆரம்பமாகின்றது. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியவர்களே இன்றைய பேச்சிலும் கலந்து கொள்கிறார்கள். அரசாங்கத் தரப்புக்கு பிரதமர் சந்திரிகாவின் செயலாளர் திரு. பாலபட்டபென்டியும், விடுதலைப் புலிகள் தரப்புக்கு திரு. கரிகாலனும் தலைமை வகிக்கிறார்கள்.

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட்ட அம்சங்கள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகளை, மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகளை அரச தரப்பினர் இன்று தெரியப்படுத்துவர்.

அத்தியாவசிய மற்றும் பாவனைப்பொருள்களை வடபகுதி மக்கள் நியாய விலையில் தாராளமாகப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் மின்சார விநியோகம், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்தல் உட்பட்ட அத்தியாவசிய சேவைகளைச் சீரமைத்தல், புனரமைத்தல் ஆகிய விடயங்களே கடந்த பேச்சுவார்த்தையில் முக்கியமாக ஆராயப்பட்டன. வடபகுதி மக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நோக்கத்தைக் கொண்டவை இவை.

இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக வடபகுதியை அபிவிருத்தி செய்வதற்கான ஓராண்டுத் திட்டம் ஒன்றையும் அரச தரப்பினர் இன்றைய பேச்சுவார்த்தையின் போது, விடுதலைப் புலிகள் தரப்புக்குத் தெரிவிப்பர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது வடபகுதி மக்களின் அன்றாட வாழ்க்கைக் கஷ்டங்களைப் போக்குவதற்கான சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு இன்று அத்திவாரம் இடப்படும்.

இதேவேளை, பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையை திறப்பது சம்பந்தமான ஒரு யோசனையையும் அரச தரப்பினர் இன்றைய பேச்சில் முன் வைப்பர் என்று அறிய வருகிறது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் மேற்பார்வையில் பூநகரிப் பாதையை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் திறந்து விடுவது என்பதே அந்த ஆலோசனை.

இதே போல போர் நிறுத்தத்துக்கான சில ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்வதற்கான சில யோசனைகளையும் அரச தரப்பினர் எடுத்து வருவர் என்றுநம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

போரை நிறுத்தி, போக்குவரத்துப் பாதையைத் திறந்தால் மட்டுமே இயல்பு நிலையை முழுமையாகக் கொண்டுவர முடியும். இதனை அரசாங்கம் உணர்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆயினும் இந்த இரண்டு விடயங்களும் இராணுவத்தோடு சம்பந்தப்பட்டதால் அவற்றை மெதுமெதுவாகக் கையாளவே, படிப்படியாக நகர்ந்து செல்லவே அரசு விரும்புகிறது என்பதும் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து, இராணுவம் சந்திரிகாவின் அதிகாரத்துக்குக் கீழ் வந்துவிட்டால், போர் நிறுத்தம், போக்குவரத்துப் பாதை திறத்தல் ஆகியவற்றை நோக்கித் துரிதமாகச் செயற்படவாய்ப்பு உண்டாகும் என்று அரச தரப்பினர் கருதுகின்றனர்.

ஆனால் அதுவரை தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டும் என்று அரசு எதிர்பார்த்தால் அது நியாயமாகாது. தமக்குரிய இயல்பு நிலை வாழ்க்கையை மீட்டு எடுப்பதற்கே அரசுக்கு இத்தனை தடங்கல்கள், தாமதங்கள் என்றால் —

அடிப்படைப் பிரச்சினையான அரசியல் விடயத்தில் ஒரு தீர்க்கமான நிலையை அடைவதிலும் அரசு இவ்வாறே தடங்கல்களைச் சந்தித்து தாமதத்தை ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் தமிழர் மனதில் இயல்பாகவே எழும்.

அதற்கு இடங்கொடாமல் செயற்படுவது அரசின் பொறுப்பு.

1993 இல் பாதுகாப்பு வரி ரூபா 660 கோடி வசூல்!

கொழும்பு, ஒக். 24

வடக்கு- கிழக்கு யுத்தத்திற்காக அரசு வசூலித்து வரும் பாதுகாப்பு வரி 1993 இல் 660 கோடி ரூபாவைத் தாண்டி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டில் வரிப்பணமாக அனைத்துத் துறைகளில் இருந்தும் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 310 கோடி ரூபா அறவிடப்பட்டது. இதில் பாதுகாப்பு வரியாக அறவிடப்படும் தொகை 12.4 சதவீதம் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தனது பிந்திய நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வரி 1992 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வங்கிகள், காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளிடம் இருந்து இவ்வரி அறவிடப்பட்டு வருகிறது. மொத்த விற்பனைவைக்கணக்கிட்டு அறவிடப்படும் இவ்வரியை அந்த நிறுவனங்கள் பாவனையாளர் மீதே சுமத்தி விடுகின்றன.

1992 இல் முதல் காலாண்டில் ஒரு சதவீதமாக இவ்வரி அறவிடப்பட்டது. பின்னர் 2, 3 சதவீதமாக இது அதிகரிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் இது 3 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

1992 இல் 380 கோடி ரூபா பாதுகாப்பு வரியாக வசூலிக்கப்பட்டது. 1993 இல் 660 கோடியாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

அடுத்த பொதுத் தேர்தல் புதிய அரசமைப்பின் கீழ்!

கொழும்பு, ஒக். 24

அடுத்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் புதிய அரசமைப்பின் கீழ்தான் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில் புதிய அரசமைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும்—

நவம்பரில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும் 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

பம்பலப்பிட்டியில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட தமிழ் வர்த்தகர் மீட்பு!

முன்னாள் ராணுவ கப்டன் கைது

கொழும்பு, ஒக், 24

பம்பலப்பிட்டியில் இனந் தெரியாத நபர்களினால் கடந்த 14 ஆம் திகதி கடத்தப்பட்ட பிரபல வர்த்தகரான ஐ. சிவப்பிரகாசம் மீட்கப்பட்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக முன்னாள்இராணுவக் கப்டன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பம்பலம்பிட்டி காசில் வீதியில் உள்ள விடுதி ஒன்றின் உரிமையாளரான இவ்வர்த்தகரை சம்பவ தினம் அதிகாலை 5-30 மணியளவில் ஜீப்பில் வந்த — இராணுவ வச்சீருடை அணிந்திருந்தவர்கள் கடத்திச் சென்றனர் என்றும்—

ஐம்பது லட்சம் ரூபா பணம் தந்தால் தான் அவரை விடுவிப்போம் என்று அவர் மனைவிக்கு தொலைபேசியில் சிலர் கூறினார்கள் என்றும்—

முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

சம்பந்தப்பட்ட வர்த்தகர் வடபகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

இனவெறியின் உச்சம் யாழ். நூலக எரிப்பு

அதைத் தடுக்க சட்டம் வேண்டும்

> "இனவெறியை சட்டத்தினால் தடை செய்க" என்ற தலைப்பில் அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள டெய்லி நியூஸ் பத்திரிகையின் 21-10-94 இதழில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில்இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகிறது.

திட்டமிட்டு அழிக்கப்பட்ட யாழ் பொது நூல் நிலையத்தை மீண்டும் கட்டி எழுப்புவது என்ற அரசின் உறுதிமொழி, இந்நாட்டின் இனங்களுக்கு இடையேயான உறவில் தென்பகுதி ஆட்சியினர் வடபகுதி மக்கள் மீது காட்டும் அருமையான நல்லெண்ண நடவடிக்கையாக சரித்திரத்தில் இடம்பெறும்.

தென்பகுதி அரசியல்வாதிகளின் வழிநடத்தலின் கீழ் 1981 ஜூன் மாதத்தில் கொலைக்காரக் குண்டர்கள் கூட்டம் யாழ்ப்பாணத்தில் வெறியாட்டம் நடத்தியதுடன், இப்பரிசுத்தமான அறிவுக் கோயிலை நெருப்புக் கிரையாக்கிய சம்பவம் சரியான வழியில் சிந்தனை செய்யும் அனைவரையும் துன்பத்தில் ஆழ்த்தியது.

அறிவுக் கோயில் அழிப்பு

கல்வியின் உயிர்நாடியான நூல்நிலைய எரிப்பு யாழ்ப்பாண மக்களை நேரடியாக பாதித்தது. ஆத்மீக மற்றும் கல்வி முன்னேற்றத்தின் சின்னமாக பல ஆண்டுகளாக கட்டி எழுப்பப்பட்டு வந்த இந்த பொது நூல்நிலையத்தின் மீது நடத்தப்பட்ட இக்கோரத் தாக்குதலால் யாழ். மக்கள் அறிவுத்துறையில் வறியவர்களாகி விட்டனர். பல துறைகளில் எழுதப்பட்ட அரிதான சுமார் 97 ஆயிரம் நூல்கள் மீட்டெடுக்கமுடியாதபடி அழிக்கப்பட்டன. முழு ஆசியாவிலுமே பிரகாசித்துக்கொண்டிருந்த அறிவுச்சுடரைக் ஒன்றான யாழ். பொது நூல்நிலையம் மிருகத்தனமான முறையில் அழிக்கப்பட்டது.

திட்டமிட்ட தாக்குதல்

1981 ஜூனில் நடந்த கொலைகளும் கலவரமும் ஒரு நோக்கத்துடன்தான் நடத்தப்பட்டன. யாராலோ வழிநடத்தப்பட்ட காடையர்களுக்கு தாங்கள் என்ன செய்கின்றோம் என்பது தெரிந்திருந்தது.

யாழ். மக்களின் சொத்து கல்விச் செல்வமே. அதைக் குறிவைத்து அரக்கத்தனமான முறையில் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் இதுவாகும். எங்கு தாக்கினாலும் யாழ். மக்கள் துன்பப்படுவார்கள் என்பது அக்காடையர்களுக்குத் தெரிந்திருந்தது.

திருப்புமுனை

நாட்டின் இனப்பிரச்சினை வரலாற்றில் இத்துன்பியல் கதை ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. பொதுநூல் நிலையை எரிப்புடன் தமிழ் இளைஞர்களின் கல்வி மற்றும் தொழில் எதிர்பார்ப்புகள் எல்லாம் புகையாகி விட்டன. தென்னிலங்கையைச் சேர்ந்த பைத்தியம் பிடித்த இனவெறியர்கள் தங்கள் கோரப்பற்களைக் காட்டினர். இதனால் வடபகுதி இளைஞர்கள் எதற்காக வாழ்ந்தார்களோ அந்த எல்லாம் இழந்தார்கள்.

ஈழப் போராளி இயக்கத்தின் வளர்ச்சிக்கு இந்தச் சம்பவம் தான் பெரிதும் உதவியது என்பதில் சிறிதளவும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

குடியேற்ற ஆட்சிக் காலத்தில் தொடக்கம் வடபகுதி இளைஞர் சமுதாயத்தின் வாழ்வின் ஆதாரமாக கல்வியே இருந்து வருகிறது. யாழ். குடாநாட்டில் மேற்கு நாட்டு மிஷனரிகளால் நிறுவப்பட்ட கல்விக்கூடங்கள் மற்றும் அது தொடர்பான வசதிகள் தான், நாட்டின் பரம்பரையாக [illegible] பிராந்தியத்தின் [illegible] மான கல்வி [illegible] முக்கிய காரணம் என்று அறிவு ஜீவிகளினால் அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ளது.

இரு துருவங்களாக வடக்கு - தெற்கு

பொது நூலகம் எரிக்கப்பட்டதனால் யாழ். மக்கள் நிரந்தரமான உளத் தாக்குதுக்கு ஆளாகினர். இன்று இந்த நாட்டை இரண்டாக பிரிக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் அளவுக்கு வடக்கையும் தெற்கையும் இரு துருவங்களாக்கியதில் நூல் நிலைய எரிப்பு கணிசமான பங்கை வகிக்கின்றது.

ஆகவே இந்நூல் நிலையத்தைக் மீண்டும் கட்டுவது என்ற அரசாங்கத்தின் உறுதி சாமாதானத்தை விரும்பும் மக்களால் வரவேற்கப்படுகின்றது. அரசின் தாபோதைய சாமாதான முயற்சியில் இதுவும் ஒரு நம்பகத் தன்மையைக் கட்டி எழுப்பும் நடவடிக்கையாக அமையும்.

யாழ்ப்பாணத்தின் கடைசி பாரம்பரிய பெருமைமிக்க பொது நூல் நிலையத்தை புனர் நிர்மாணஞ் செய்வதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். யாழ். பொதுநூல் நிலையத்துக்கு, அது இழந்து போன புத்தகங்கள் மற்றும் அறிவு சாதனங்களைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நாட்டின் ஏனைய நூல் நிலையங்களின் உதவியைப் பெறவேண்டும்.

இனவெறிக்கு இடமில்லை

இனவெறி, அரசியல் காடைத்தனத்துக்கு இடமில்லை என்பதை இறுக்கமான முறையில் எடுத்துரைக்க, இனமோதல் வரலாற்றில் ஏற்பட்ட இந்த அவமானச் சம்பவத்தை அரசாங்கம் பயன்படுத்த வேண்டும்.

இந்த நாட்டில் இனவெறியைத் தடை செய்யத் தேவையான சட்டத்தை அரசாங்கம் [illegible] வழியை அரசு இது [illegible] கண்டுபிடிக்க வேண்டும்.

பயணி காசோலை மோசடி பிலிப்பீன்ஸ் யுவதி கைது

கொழும்பு, ஒக். 24

பயணிகள் காசோலை மோசடி தொடர்பாக "இன்டர்போல்" (சர்வதேச பொலீஸ்)அமைப்பால் தேடப்பட்டு வந்த பிலிப்பீன்ஸ் யுவதி ஒருவரும் இலங்கை வாலிபர் ஒருவரும் கம்பஹா பொலீஸாரால் காசோலை மோசடியில் ஈடுபட்டிருந்த வேளை கைது செய்யப்பட்டனர்.

15 லட்சம் ரூபா பெறுமதியான பயணிகள் காசோலைகள் இவர்களிடமிருந்து மீக்கியுள்ளன.

ஜாஎல லக்கலையில் வைத்து சில பிரயாணிகள் காசோலைகள் — மாற்ற முயன்ற போது இவர்கள் பிடிபட்டனர்.

ஹொங்கொங்கில் உள்ள ஒரு குழுவுடன் சேர்ந்து இவர்கள்இயங்கிவந்தனர்என்றும்—

இவர்களை சர்வதேசப் பொலீஸார் தேடி வலைவிரித்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

வெளியூர் மீனவர் கடற்றொழில் செய்ய வசதியாக வடக்கு - கிழக்கு கடற்கரை ஓரங்களில் இராணுவ முகாம்கள் அமைப்பேன்

காமினி தரும் தேர்தல் வாக்குறுதி

கொழும்பு, ஒக் 24

நான் ஜனாதிபதியானால் வடக்கு-கிழக்கில் வெளியூர் மீனவர்கள் சென்று கடற்றொழிலில் ஈடுபடும் பிரதேசங்களில் இராணுவ முகாம்களை அமைப்பேன்.

ஐ.தே.க வேட்பாளர் திரு. காமினி திஸநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளியூர் மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் சந்திரிகா அளித்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் தெரித்தார்.

"நான் ஜனாதிபதியானவுடன் பொலீஸ் மற்றும் ஆயுதபடைகளின் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை நானே ஏற்றுக்கொள்ளவேன்"— என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

ஜனாதிபதி தேர்தல்: ரணில் உதவவில்லை என ரணசிங்கா அறிவிப்பு

கொழும்பு, ஒக். 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடமிருந்து தாம் எவ்வித உதவியையும் பெறவில்லை என்று சுயேச்சை வேட்பாளர் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்திருக்கிறார்.

ஐ.தே.க வேட்பாளராக ரணில் போட்டியிட்டிருந்தால் தாம் போட்டியிட்டிருக்கமாட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நண்பர்கள் தமது தேர்தல் நடவடிக்கைகளுக்கு உதவுவதாகக் கூறிய திரு. ரணசிங்க, தற்போது போட்டியிடும் வேட்பாளர்களில் தாமே அனுபவம் வாய்ந்தவர் என்றும் தெரிவித்தார். (எ)

வாக்காளர் அட்டைகள் விநியோகம்

கொழும்பு, ஒக் 24

எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் வேலைகள் இன்று முதல் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தபால் மூல வாக்களிப்பு 31ஆம் திகதி ஆரம்பமாகும். (உ)

தேர்தல் முடிந்த கையோடு டி. பியின் செயலாளருக்கு வெளிநாட்டில் புதிய பதவி

கொழும்பு, ஒக். 24

ஜனாதிபதி விஜேதுங்காவின் செயலாளராக பதவி வகித்து வரும் திரு. கே. எச். ஜே. விஜேதாஸா, லண்டனில் உள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைமைச் செயலகத்தில் முக்கிய பதவி ஒன்றை ஏற்கவிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு திரு. விஜேதாஸா புதிய பதவியை ஏற்க லண்டன்புறப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய அமைப்பின் ('கொமன் வெல்த்') தலைமையகத்தில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதம பேச்சாளராக இவர் கடமையாற்றுவார் என்று நம்பத்தகுந்த அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி "தி ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டது.

1977இல் இருந்து பிரதமராக இருந்த பிரேமதாஸாவின் செயலாளராகப் பணிபுரிந்து வந்த இவர், 1989 முதல் ஜனாதிபதியின் செயலாளராகப் பணிபுரிந்து வருகின்றார். (உ-எ)

மக்கள் வங்கியின் 6 உயர் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு ரத்து

கொழும்பு, ஒக். 24

மக்கள் வங்கியின் ஆறு பிரதிப்பொதுமுகாமையாளர்கள் பதவி இறக்கப்பட்டனர்.

அவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு ஒழுங்கற்ற முறையில் இடம் பெற்றுள்ளதாக உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியிருந்தது.

அதற்கு இணங்க, ஆறு பிரதிப் பொது முகாமையாளர்களையும் உதவிப் பொது முகாமையாளர்களாகப் பணிபுரியும்படி வங்கி நிர்வாகம் பணிக்குள்ளது.

பதவி உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களும், வங்கி நிர்வாகத்தினால் திரும்பப் பெறப்பட்டன. பிரதிப் பொதுமுகாமையாளர் பதவிக்கு வங்கி நிர்வாகம் நேர்முகப் பரீட்சை நடத்தியிருந்தது. எனினும் சம்பந்தப்பட்ட அறுவரும், உயர்மட்ட உத்தரவு ஒன்றின் கீழ் பதவி உயர்த்தப்பட்டனர்.

கோண்டாவிலில் நேற்று புதுவகை ஆர்ப்பாட்டம்!

கோண்டாவில் பகுதியில் நேற்று மாலை புதுவகையான ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. ஆண்கள் சிலர் பெண்களைப் போல வேடம் போட்டு, சனிக்கிழமை அங்கு நடந்த சம்பவம் ஒன்றுக்கு ஆட்சேபம் தெரிவித்தனர்.

நாடக அரங்கக் கல்லூரியின் மாணவி ஒருவரை சைக்கிளால் இடித்ததாகவும், தகாத வார்த்தை கூறினாள் ஏசியதாகவும் கூறப்படும் சம்பவத்தையிட்டு —

ஊர்மக்கள் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்காமலும், அறிவுரை கூறாமலும் —

அச்சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு நின்றதை ஆட்சேபிப்பதற்காகவே — இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், சம்பவம் நடைபெற்ற கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு சமீபமாக, நேற்று மாலை 5.15 மணியளவில் இரண்டு பக்கங்களிலும் போக்குவரத்தைத் தடுத்தனர்.

பின்னர் பெண்களாக வேடம் போட்டு வந்தவர்களும், ஏனையோரும் சேர்ந்து சனிக்கிழமை நடபெற்றதாக கூறப்படும் சம்பவத்தை நடித்துக் காண்பித்தனர்.

ஊர் மக்கள் சார்பில் ஒருவர் அந்த இடத்துக்குச் சென்று தாம் நடந்துகொண்டதற்கு வருத்தம் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (அ-9)

அறிவியல் அரங்கு

தென்மராட்சி, ஒக். 24

சரசாலை இந்து மன்றம் நடத்தும் அறிவியல் அரங்கு நாளை மறுதினம் புதன் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் "தமிழர் பண்பாடு" என்ற பொருளில் உரை நிகழ்த்துவார். (க-117-30)

சஞ்சிகை வெளியீடு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வணிகமாணவர் மன்றத்தின் "வணிகவியலாளன்" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. ப. சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கட்டாக்காலி நாய்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

இம்மாதம் 207 பேர் கடியுண்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். குடாநாட்டில் மீண்டும் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன.

வீட்டுமுன் வீதி ஓரத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஆறு வயதுச் சிறுவன் ஒருவரை அவ்வீதியால் வந்த கட்டாக்காலி நாய் ஒன்று உருட்டி உருட்டிக் கடித்துக் குதறியது. அயலவர்களின் உதவியுடன் நாயிடமிருந்து சிறுவன் மீட்கப்பட்டார். நாய் தப்பி ஓடி மறைந்தது.

நாவாந்துறையில் நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த உத்தமன் பிரியங்கன் என்ற சிறுவனே படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் நேற்று மாத்திரம் பதினொரு பேர் நாய்க் கடிக்கு உள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

யாழ். பொதுவைத்தியசாலைப் பதிவின்படி இம்மாதம் கடந்த 22 நாட்களில் 207பேர் நாயினால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். (இ-15)

கொழும்பில் இருந்து மரக்கறி விதை

யாழ்ப்பாணம், ஒக். 24

உள்நாட்டு மரக்கறி விதைகளை கொழும்பில் இருந்து தருவித்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கத்தரி, புடலங்காய் வெண்டி, தக்காளி, பூசணி, பயிற்றங்காய் போன்ற உள்நாட்டு மரக்கறி விதைகளே எடுத்து வரப்படவுள்ளன. (க-17)

விதை கிழங்கு முற்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 24

கமநல சேவை நிலையங்களில் விதை உருளைக் கிழங்குக்கு பதிவு செய்துகொண்ட விவசாயிகளில் சிலர் இதுவரை முற்பணம் எதுவும் செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விதை உருளைக் கிழங்கு எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் முற்பணம் கட்டாத விவசாயிகள் பணத்தைச் செலுத்தி கிழங்கை விரைவாக கப்பலில் எடுத்துவருவதற்கு உதவுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

குழாய்க்கிணறு

பாடசாலைகளில் நிலவும் குடிநீர்ப் பிரச்சனைகளை கருத்திற் கொண்டு உடுவில் மல்லாகம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தேநிசர்மாணிக்களால் குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. (உ)

வடக்கிற்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஆராயப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

புனரமைப்புக்குத் தேவையான பொருள்கள், உபகரணங்கள், தார் மற்றும் பாடசாலை, ஆஸ்பத்திரி ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்குத் தேவையான பொருள்கள் போன்றவற்றை அனுப்பி வைப்பதற்கு வாராந்தம் ஒரு கப்பல் சேவையை நடத்துவது குறித்தும் உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றதாம். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

ஜோன்பிள்ளை ஜெகநாதன்

ஜோன்பிள்ளை ஜெகநாதன் காலமாகிவிட்டார். அன்னார் ஜோன்பிள்ளை - ஆறுமுக அம்மாளின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சிவதாஸ் [நாதஸ்வரம்], ஜெயந்தி, சிவகுமார் [தவில்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தராசா, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், மாசிலாமணி - முத்துலட்சுமியின் அன்பு மருமகனும், விசாகனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (23-10-94) ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு பொறளை கனத்தை மயானத்தில் காலை 9-00 மணிக்கு நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
ஜே. சிவதாஸ் (மகன்)
[நாதஸ்வர வித்துவான்]

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு. (33492)

இளையதம்பி பாலசிங்கம்

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இ. பாலசிங்கம் 20 – 10 – 94 அன்று புங்குடுதீவில் காலமானார். அன்னார் இளையதம்பி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்தம்பி, மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகம்மாவின் அன்புக்கணவரும், இராசதுரை, புவனேஸ்வரி (ஜேர்மனி), நவரட்ணராஜா (நோர்வே), உதயராணி (சுவிஸ்), யோகரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், பத்மநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கனகேஸ்வரி, அனிலா (நோர்வே), சிவநேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுசா, மேகலா ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, காலஞ்சென்ற நல்லையா, தனலட்சுமி, இராசதுரை, பார்வதி, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரர்கள்.

இல. 46,பொற்பதி வீதி,
கொக்குவில். (33493)

திருமதி சதாசிவம் தனலக்ஷ்மிஅம்மா
(வட்டுக்கோட்டை கிழக்கு)

வட்டுகோட்டை கிழக்கில் வசித்த திருமதி சதாசிவம் தனலக்ஷ்மிஅம்மா கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற ஓவசியர் சதாசிவத்தின் அன்பு மனைவியும், Dr. பசுபதிராசா (லண்டன்), தர்மலிங்கம், திருமதி குணரத்தினம் கமலாம்பிகை, காலஞ்சென்ற சிவசோதிராசா, திருமதி கணேசானந்தன் கனகமணி, திருமதி ராசரத்தினம் ஜெயலக்ஷ்மி, செல்வராசா, திருமதி தனபாலசிங்கம் வசந்தா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
ச. தர்மலிங்கம் (பரஞ்சோதி)
(மகன்)

வட்டுக்கிழக்கு
வட்டுக்கோட்டை. (33497)

திருமதி முத்தையா வள்ளியம்மை

வேலணை கிழக்கு, 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் 601/01 ஆஸ்பத்திரி வீதியில் வசித்து வந்தவருமான திருமதி முத்தையா வள்ளியம்மை 23-10-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசிங்கம் (சாரதி) பகீரதி (இளைப்பாறிய ஆசிரியை), இரத்தினசிங்கம் (சாரதி), சத்தியபாமா (இந்தியா), அவர்களின்அன்புத் தாயாரும், செல்லத்துரை (இளைப்பாறிய கிராம சேவகர் முல்லைத்தீவு), நிலகவதி, சிவராசா(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-10-94) மேற்படி இல்லத்தில் பி.ப 2.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
செ. சுதாகர்
[பேரன்]

601/1 ஆஸ்பத்திரி வீதி,
[மாறன் பதிப்பகம் முன்பாக],
யாழ்ப்பாணம். [33503]

2,000 கோடி ரூபா பெறுமதியுடைய போர்த் தளபாட கொள்வனவு ரத்து!

கொழும்பு, ஒக். 24

சுமார் இரண்டாயிரம் கோடி ரூபா பெறுமதிக்கு மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த ஆயுதக் கொள்வனவை புதிய பிரதமர் சந்திரிகா குமாரதுங்க ரத்துச் செய்துவிட்டார் என கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஆயுதக் கொள்வனவுக்காக கோரப்பட்டிருந்த ரெண்டர்களை ரத்துச் செய்யுமாறு பிரதமர் உத்தரவிட்டிருப்பதாக அறியவருகிறது.

பிரதமர் சந்திரிகா உத்தரவு

★ பின்வரும் கொள்வனவுகளுக்கான ரெண்டர்களும் ரத்துச் செய்யப்பட்டிருப்பவற்றில் அடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது!

★ ரஷ்யாவிலிருந்து இருபுக்காரா விமானங்கள்.

★ செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து எம் – 81 ரக யுத்த டாங்கிகள் — மூன்று

★ சீனாவிலிருந்து நீருந்து விசைப் படகுகள் — ஆறு

★ சிங்கப்பூர் "சீமென்மரைன் என்ஜினியரிங் நிறுவனத்துடன் இணைந்து கொழும்பு டொக்யாட் லிமிட்டெட் கட்டுவதற்கு ஏற்பாடாகியிருந்த பாரிய யுத்தக் கப்பல் ஒன்று.

★ சீனாவிலிருந்து நான்கு விமானங்கள். (உ)

இரண்டு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னாண்டோ,இலங்கை வங்கித் தலைவர் ராஜன் ஆசீர்வாதம், கட்டடக்கலை நிபுணர் திரு. நவீன் குணரத்ன ஆகியோர் அரசுத் தரப்பில் பங்குபற்றும் ஏனைய உறுப்பினர்களாவர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கே.கரிகாலன்,யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ஆ. ரவி ஆகியோர் கலந்து கொள்வர். (உ)

அமைச்சர்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்ததை அடுத்தே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்கப்போவதாக இ. தொ. கா முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

அரச தூதுக்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதன் காரணமாக அரசாங்கத்தினால் போர் நிறுத்தமோ அல்லது பூநகரி பாதையைத் திறப்பதோ செய்யமுடியாமல் உள்ளது. ஆனாலும் இது பற்றி பேச்சுகள் தொடர்ந்து நடக்கும்.

எமது அடுத்த (இன்றைய) யாழ். விஜயத்தின் போது நாம் போர் நிறுத்தம், பாதை திறப்பு ஆகியவை பற்றி பேசுவோம். அதன் பின்னரே பிரதமர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இவ் விஷயங்கள் பற்றிப் பேசுவார்.

கடந்த 10 ஆண்டுகளாக சமாதானத்தை நோக்கிய பணிகளில் ஈடுபட்டு வந்த எனக்கு சமாதானத்தை உருவாக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இது மகிழ்ச்சி தருகிறது. எமது சமாதான முயற்சி அரசியல் கலக்காதது அல்ல.

உண்மையான ஜனநாயக வழியில் மன சுத்தியுடன் எமது பணி தொடர்கிறது.

கடந்த கால பேச்சுவார்த்தை போன்று இம் முறை தாமதம் இருக்காது. உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு வருடம் சென்றாலும் சமாதானத்தைக் காணுவோம் என்ற நம்பிக்கை உண்டு.

இவ்வாறு திரு. குணரத்தினா தெரிவித்தார். (உ-எ-3)

சமாதான முயற்சிகளுக்கு பல நாடுகள் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

ஸ்ரீலங்கா அரசின் சமாதான முயற்சிகளை பல்வேறு நாடுகள் பாராட்டியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மன், கனடா, பிரான்ஸ், ஜப்பான், ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, நோர்வே, டென்மார்க், ஒஸ்திரியா போன்ற நாடுகள் வடக்கு — கிழக்கில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உதவி வழங்கவும் முன்வந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. [உ]

காமினியை ஆதரித்து ரொனி பிரசாரம் செய்வார்

கொழும்பு. ஒக். 24

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யப்போவதாக முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் அறிவித்திருக்கிறார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.கவின் மாத்தறை மாவட்ட எம். பியாகத் தெரிவு செய்யப்பட்ட ரொனி இப்போது லண்டனில் தங்கியுள்ளார். இவர் நேற்று கொழும்பு திரும்புவதாக இருந்தது. (உ-எ)

இராணுவ தலைமைப் பீடத்துக்கு எதிரான

பிரதமரின் போக்குக்கு சிப்பாய்கள் முழு ஆதரவு!

கொழும்பு, ஒக். 24

இராணுவத் தலைமைப் பீடத்துக்கு எதிராக பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருக்கும் கருத்துகள் சாதாரண சிப்பாய்கள் மத்தியில் பிரதமருக்கு ஆதரவைப் பெற்றுத் தந்திருப்பதாக சிங்கள செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

"படையினரில் சாதாரண சிப்பாய்களும், கனிஷ்ட அதிகாரிகளும் தமது சிரேஷ்ட அதிகாரிகள் பற்றிக் கீழ்த்தரமான அபிப்பராயத்தையே கொண்டுள்ளனர்.

உயர் அதிகாரிகள் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு செயற்படுகின்றனர். அவர்களுக்குப் பதுங்கு குழிகளின் நிலைமை உண்மையில் தெரியாது [என்றும் சாதாரண படையினர் கருதுகின்றனர்.

"இத்தகைய தமது உயர் அதிகாரிகளை அரசியல்வாதிகள் கண்டிப்பதை சாதாரண சிப்பாய்கள் பாராட்டவும் செய்வார்கள், அதனால் அவர்கள் சந்தோசப்படவும் கூடும்.

இதன் காரணமாகவே படையினர் தொடர்பான பிரதமரின் கூற்றை எதிர்க்கட்சிக் காரர்கள் தமது தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதில் அதிக சிரத்தை காட்டவில்லை.

அல்வாறு அவர்கள் பிரசாரம் செய்வார்களாயின் சிப்பாய்களின் ஆதரவு பெருமளவில் பிரதமர் சந்திரிகாவுக்கே கிடைக்க வாய்ப்புண்டு

— இவ்வாறு பி. பி. சியின் சிங்கள சேவையின் செய்தியாளரான எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார். (உ-ஐ-6)

எமது வரலாற்றை அறிந்து கொள்ள தமிழருக்கு ஆவணக் காப்பகம் தேவை

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை

"தமிழருக்கென்று ஒரு ஆவணக் காப்பகம் அவசியம் தேவை.

எமது வரலாற்றை நிகழ்கால, எதிர்காலச் சந்ததியினர் தெளிவாக அறிந்து கொள்ள இது துணை புரியும்".

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழின்பக் கண்காட்சியின் இறுதி நிகழ்வான பரிசளிப்பு விழாவில் உலகத் தமிழ் ஆவணக் காப்பகத்தை நிறுவி சுமார் 35 ஆண்டுகளாக அதை நடத்திவரும் குரும்பசிட்டி இராஜ கனகரத்தினத்தைக் கௌரவித்து பொன்னாடை போர்த்திய போது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாஇவ்வாறு கூறினார்.

கடந்த 18 ஆம் திகதி இந்நிகழ்வு இடம்பெற்றது.

திரு. டிவகலாலா மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழரைப் பொறுத்தவரை ஆவணக் காப்பகத்துறை உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கனகரத்தினம் அவருடைய துணைவி பவளராணியின் உதவியுடன் சொந்த முயற்சியிலும்,சொந்தச் செலவிலும் உலகத் தமிழ் ஆவணக் காப்பகத்தை வியப்புக்குரிய முறையில் நிர்வகித்து வருகின்றார். இது பாராட்டுக்குரிய ஒரு மகத்தான முன் [illegible] ஆளுநர் [illegible] றார். அவர்.

இந்நிகழ்வில் மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா மரநடுகை, சூழல்ப் பாதுகாப்புப் பணிகளுக்காகவும், திரு. மார்க் ஓவியத் துறையில் ஆற்றிவரும் பணிகளுக்காகவும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (க)

புலிகளின் குரல் வானொலியில்

24 — 10 — 1994
திங்கள் இரவு

★ 8.01 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8–20 — தாயகப் பாடல்கள்
★ 8–30 — செய்திகள்
★ 8–40 — தரிசனம் பாலர் கல்விக்கழக தலைவர் திரு. ஆறுமுகம் செல்லையா அவர்களுடைய செவ்வி.

25 — 10 — 1994
செவ்வாய் காலை

★ 7–02 — மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7–30 — செய்திகள்
★ 7–35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7–40 — தாயகப்பாடல்கள்

பவுண் பெறுமதி

கடந்த ஒரு வார காலப் பகுதிக்கான பிரிட்டிஷ் காசுக் கட்டளைகளின் பெறுமதி ஒரு பவுணுக்கு 74ரூபா 53சதமாகும் என்று யாழ். பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார், [ஐ]

காண்டோ துரைரத்தினம் காலமானார்

கடந்த 25 வருடங்களாக இலங்கையின் பல பாகங்களிலும் வீரதீர சாகஸ நிகழ்ச்சிகளைப் புரிந்து வந்த சாண்டோ எம். துரைரத்தினம் தமது 53 ஆவது வயதில் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார்.

கடந்தகாலங்களில் பொதுச் சேவைகளுக்கு நிதி திரட்டுவதற்காக சாகஸ நிகழ்ச்சிகளை நடத்தி வந்த அவர், நேற்று முன்தினம் பளை மகாவித்தியாலயத்தில் சாகஸ நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தபோது யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சாண்டோ துரைரத்தினம் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்.

அவருக்கு மூன்று மகன்மாரும் ஒரு மகளும் உள்ளனர்.

ஏற்பு வலியால் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 24

கடந்த ஒரு மாதத்திற்கு முன் பனம் வேர் குத்திய காயத்திற்கு ஏற்புத் தடுப்பூசி போட்டு தகுந்த முறையில் சிகிச்சை மேற்கொள்ளத்தவறியதால் ஏற்பு வலி நோய்க்கு இலக்காகி நேற்று ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டையில் வசித்து வந்த வேலுப்பிள்ளை செல்லத்துரை (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-13-15)

மலிவு விற்பனை வாரம்
24 — 10 — 1994 — 30 — 10 — 1994

★ கேர் (f) போம் பிறசியர்ஸ்
★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்
★ பெனியன்கள் ★ தையல் நூல் வகைகள்
★ எலாஸ்டிக் வகைகள் ★ யட்டிகள்

மற்றும் புடைவை வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ சிறி முருகன் ★
303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
[33433]

திக்கெட்டும் சிறக்கும் தித்திக்கும் தீபாவளி திருநாளை முன்னிட்டு
★ மகோன்னத மலிவு விற்பனை ★

★ இறக்குமதி செய்யப்பட்ட சகலருக்குமான ஆடை வகைகள்
★ மங்கள வைபவங்களுக்கான பட்டுச் சேலைகள், ★ வேட்டி, ★ காஞ்சிபுர வகைகள் அனைத்தும்
மனநிறைவுடனும், விலைக்குறைவுடனும் பெற்றுக் கொள்ள நாடிடுங்கள்:

சோபனா ஆடையகம்
16, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

மதுரா பட்டு மகால்
75, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

சிறக்கவிருக்கும் திருநாளில் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் மனநிறைவுடன் வாழ்த்தி நிற்கும்:

சோபனா ஆடையகம், மதுரா பட்டு மகால்
உரிமையாளர் & ஊழியர்கள்

[சி/9530]

இப்பத்திரிகை நியூ உதயன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org